

மேனாள் ஒன்றிய அமைச்சர் – கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா.எம்.பி., பெரம்பலூர் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் மருத்துவர் எஸ்.டி.ஜெயலெட்சுமி சென்னை அலுவலகத்தில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். அப்போது மாவட்டக் கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



கரூர் சட்டமன்றத் தொகுதி, தாந்தோணி மேற்கு ஒன்றியக் கழகச் செயல்வீரர்கள் கூட்டம் கரூர் கந்தன் மகாலில் நடைபெற்றது. கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில், சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், பூத் (மண்டல) பொறுப்பாளர்கள், பூத் கமிட்டி நிர்வாகிகள், மாவட்டம், பகுதி, வார்டு சார்பு அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் ஆயிரக்கணக்கில் கலந்துகொண்டனர்.

### தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் - 2026

# வேட்பு மனுத் தாக்கல் இன்று தொடங்குகிறது!

## ஏப்ரல் 6 வரை தாக்கல் செய்யலாம்

சென்னை, மார்ச் 30-

தமிழ்நாட்டில் சட்ட மன்றத் தேர்தல் ஏப்ரல் 23ஆம் தேதி நடைபெறுகிறது. இதற்கான வேட்பு மனுத்தாக்கல் இன்று தொடங்கிறது.

234 தொகுதிகளை கொண்ட தமிழக சட்டபேரவைக்கான தேர்தல் ஏப்ரல் 23ந் தேதி அன்று ஒரே கட்டமாக நடைபெறுகிறது.

வாக்கு எண்ணிக்கை மே 4ம் தேதி நடைபெறுகிறது. தேர்தலை முன்னிட்டு தி.மு.க. உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளும், தொகுதி பங்கீடு, வேட்பாளர் தேர்வு, தேர்தல் அறிக்கை வெளியீடு உள்ளிட்ட தீவிர அரசியல் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. தேர்தலை முன்னிட்டு தேர்தல் நடத்தை விதிகள் ஏற்கனவே அமலில் உள்ளன.

இந்நிலையில் தமிழக சட்டசபை தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் இன்று 30.03.2026 - திங்கட்கிழமை காலை 11 மணிக்கு தொடங்கி ஏப்ரல் 6ந்தேதி (திங்கட் கிழமை) வரை நடக்கிறது.

8 நாட்கள் அறிவிக்கப்பட்டாலும், 4 நாட்கள் மட்டுமே வேட்பு மனுக்களை தாக்கல் செய்ய முடியும்.

குறிப்பாக, வருகிற 31ந்தேதி (செவ்வாய்க் கிழமை) மகாவீர் ஜெயந்தி,


ஏப்ரல் 1ந்தேதி வங்கி முழு வருட கணக்கு முடிவு, 3ந்தேதி புனித வெள்ளி, 5ந்தேதி ஞாயிற்றுக் கிழமை ஆகிய 4 நாட்கள் விடுமுறைநாட்களாக அமைந்துள்ளது. எனவே அன்றைய நாட்களில் வேட்பு மனு தாக்கல் செய்ய இயலாது.

இன்று 30ந்தேதி (திங்கட் கிழமை), 2ந்தேதி, 4ந்தேதி மற்றும் 6ந்தேதி ஆகிய 4 நாட்களில் மட்டுமே குறிப்பிட்ட நேரத்திற்குள் சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலரிடம் மனுக்களைச் சமர்ப்பிக்க வேண்டும். வேட்பாளர்கள் https://suvidha.cci.gov.in என்ற இணையதளம் மூலமாக வேட்புமனு தாக்கல் செய்ய தேர்தல் ஆணையம் அனுமதி அளித்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

### ம.தி.மு.க. போட்டியிடும்

# 4 தொகுதிகளின் வேட்பாளர்கள்!

## ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அறிவிப்பு!



சென்னை, மார்ச் 30-

சென்னை எழும்பூரில் உள்ள ம.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ நான்கு சட்டமன்ற தொகுதிக்கான வேட்பாளர் பட்டியலை அறிவித்தார். அதன்பின் செய்தியாளர்களிடம் பேசியதாவது,

“2026 தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி அங்கம் வகிக்கும் ம.தி.மு.க.விற்கு நான்கு தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்த நான்கு தொகுதிகளில் போட்டியிட விண்ணப்பங்களை பெற்றோம், அதன் பின் நபர்களை தேர்ந்தெடுத்து தொகுதி நிலவரம் மற்றும் அவர்களுடைய நிலைமை பற்றி கேட்டிருந்தோம், அதன் அடிப்படையில்... மொடக்குறிச்சி செந்தில்நாதன் உதயசூரியன் சின்னத்தில், மதுரை தெற்கு பூமிநாதன் உதயசூரியன் சின்னத்தில்... கடையநல்லூர் தி.மு.ராஜேந்திரன் உதயசூரியன் சின்னத்தில், சீர்காழி (தனி) செந்தில் செல்வன் தனி சின்னத்தில் போட்டியிட உள்ளனர்.

**2ம் தேதி தேர்தல் பிரச்சாரம்**

வரும் 2ம் தேதி பிரச்சாரத்தை தொடங்க உள்ளேன். தி.மு.க. மற்றும் தி.மு.க கூட்டணியில் அங்கம் வைத்திருக்கக்கூடிய அனைத்து கட்சிகளுக்கும் பிரச்சாரத்தை மேற்கொள்ள உள்ளேன். திராவிட இயக்கத்தை அண்ணா, பெரியார் கலைஞர், உருவாக்கியிருக்க கூடிய கோட்டைக்கு எந்த சேதமும் ஏற்பட அனுமதிக்க கூடாது, பிரச்சாரத்தில் இதனை முதன்மையாக வைக்க இருக்கிறோம்.


**தி.மு.கழக கூட்டணி வெற்றி உறுதி!**

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தொடர வேண்டும், ஒன்றிய அரசு ஓரவஞ்சனையாக செயல்பட்ட போதும் மக்களுக்கு எண்ணற்ற திட்டங்களை தீட்டி உள்ளார்கள். இதனை மக்களிடம் கொண்டு செல்வோம், திராவிட முன்னேற்ற கழகம் வெற்றி பெற உங்களின் வாக்குகளை செலுத்துங்கள் என பிரச்சாரம் மேற்கொள்ள இருக்கிறேன்” என்றார்.

### திருச்சி உள்ளிட்ட டெல்டா மாவட்டம் முழுவதும் உள்ள

# 41 தொகுதிகளிலும் தி.மு.க. கூட்டணியே வெற்றி பெறும்!

## அமைச்சர் கே.என்.நேரு பேட்டி!



*திருச்சி, மார்ச் 30 -*

*கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சருமான கே.என்.நேருவின் சகோதரரும் தொழிலதிபருமான மறைந்த ராமஜெயத்தின் 14 வது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு திருச்சி கேர் காலேஜில் உள்ள அவருடைய உருவ சிலைக்கு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே. என்.நேரு தலைமையில் திமுகவினர் இன்று மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்கள்.*

*தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து பேசிய அமைச்சர் கே.என்.நேரு,*

*திருச்சியில் அனைத்து தொகுதிகளிலும் நிச்சயம் மீண்டும் திமுக மற்றும் தோழமைக் கட்சிகள் வெற்றி பெறும். முதலமைச்சர் மு. க.ஸ்டாலின் மீண்டும் முதலமைச்சராவதற்கு திருச்சி முக்கிய பங்கு வைக்கும் என நம்புகிறோம் மக்களும் அதை தான் விரும்புகிறார்கள்.*

*திருச்சி மட்டுமல்ல திருச்சி உள்ளிட்ட டெல்டா மாவட்டம் முழுவதும் உள்ள 41 தொகுதிகளிலும் நிச்சயம் நாங்கள் வெற்றி பெறுவோம்.*

*பொதுமக்கள் திமுக அணிக்கு வாக்களிக்க தயாராக இருக்கிறார்கள்.*

*இந்த ஆட்சி மீண்டும் மலர வேண்டும் என்பது தமிழ்நாட்டு மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.*

*திருச்சி கிழக்கு தொகுதியில் விஜய் போட்டியிட்டால் திமுக வெற்றி சாத்தியமா என்கிற கேள்விக்கு ஜனநாயகத்தில் யார் வேண்டுமானாலும் போட்டியிடலாம் அனைவருக்கும் தேர்தலில் போட்டியிட உரிமை உள்ளது யார் போட்டியிட்டாலும் திமுக வேட்பாளரை வெற்றி பெற செய்ய நாங்கள் அனைத்து முயற்சிகளையும் எடுத்து வெற்றி பெற வைப்போம்.*

*இந்த முறை தேர்தலில் போட்டியிட இளைஞர்கள் மகளிர் என பலருக்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது.*

*200 தொகுதிகளில் வெற்றி பெறுவோம் என எடப்பாடி பழனிச்சாமி கூறுகிறார் மீதமுள்ள 34 தொகுதிகளிலும் அவர் சேர்த்தே கூறட்டும். 200 தொகுதிகளில் வெற்றி பெற வேண்டும் என்பது அவருடைய ஆசை ஆனால் அது நிறைவேறப் போவதில்லை. திமுக அணிதான் பெரும்பான்மையான இடங்களில் வெற்றி பெறும்.*

*கூட்டணியில் யாரையும் விட்டுவிடாமல் அனைவரையும் அரவணைத்து செல்லும் முதலமைச்சருக்கு பெருமை தான்.*

*விஜய் பிரச்சாரம் செய்வதை நாங்கள் ஏன் தடுக்க போகிறோம். அவரவருக்கு வாய்ப்பு கிடைக்கும் பொழுது திமுகவை விமர்சனம் செய்வார்கள்.*

*டெல்டா மாவட்டங்களுக்கு நல்ல திட்டங்களை கொண்டு வருவதற்கு வேட்பாளராக அறிவிக்கப் பட்டுள்ள அனைவரும் பாடுபடுவோம்.*

*திருச்சியை இரண்டாவது தலைநகரமாக அறிவிப்பது குறித்து நிதி நிலைக்கு ஏற்ப முடிவு எடுப்பார்கள் என கூறினார்.*

*இந்த நிகழ்வில் மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி, மாநகராட்சி மேயர் அன்பழகன் திமுக சட்டமன்ற தொகுதி வேட்பாளர்கள் துரைராஜ், பாரி வள்ளல், கருணை ராஜா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.*

### வில்லியனூர் நகரப் பகுதியில்

# ரூ.150 கோடிக்கான வளர்ச்சிப் பணிகள்!

## பட்டியலிட்டு தி.மு.க. வேட்பாளர் இரா. சிவா வாக்கு சேகரிப்பு !

*புதுச்சேரி, மார்ச் 30-*

*வில்லியனூர் நகரப் பகுதியில் பிரச்சாரம் மேற்கொண்ட திமுக வேட்பாளர் இரா. சிவா அவர்கள் வில்லியனூர் நகரப் பகுதியில் சுமார் 150 கோடிக்கு மேற்கொள்ளப்பட்ட பணிகளை வாக்காளர்களிடம் பட்டியலிட்டு வாக்கு சேகரித்தார்.*

*வில்லியனூர் சட்டமன்றத் தொகுதியில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியின் சார்பில் போட்டியிடும் திமுக வேட்பாளர் இரா. சிவா அவர்கள் முதல் கட்டமாக ஜி.என்.பாளையம், நடராஜன் நகர், முத்துப் பிள்ளைப் பாளையம், அரும்பார்த்தபுரம், மல்லிகை நகர், ஒதியம்பட்டு கிராமங்களில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.*

*தொடர்ந்து இன்று காலை வில்லியனூர் நகரப் பகுதியில் உள்ள பரசுராமபுரம், மேலண்ட் வீதி, நவசன்னதி வீதி, தென்கோபுர வீதி, பிராமிணால் வீதி, பெருமாள்புரம், கிருஷ்ணா நகர், பத்மினி நகர் பகுதிகளில் வீடு, வீடாக சென்று கடந்த ஐந்தாண்டுகளில் வில்லியனூர் வளர்ச்சிக்கு தாம் செய்த பணிகளை பட்டியலிட்டும், துண்டு பிரசுரங்கள் வழங்கியும் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களித்து என்னை மீண்டும் வெற்றி பெற செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.*

*மேலும், தொலைநோக்கு திட்டமான எப்படி குடிநீர் திட்டம் ரூ. 60 கோடி, திருக்காமீஸ்வரர் கோவில் புதிய தேர் செய்ய ரூ. 3 கோடி, ஏழை, எளியய மக்கள் பயன் பெறும் கஸ்தூரிபாய் திருமண மண்டபம் கட்ட ரூ. 8 கோடி, நகர் முழுவதும் ஹமாஸ், மினி ஹமாஸ் விளக்குகள், மாட வீதிகளில் வடிகால் வாய்க்காலுடன் தரமான சாலை வசதி என சுமார் 150 கோடிக்கான வளர்ச்சிப் பணிகள் செய்திருப்பதை மக்களிடம் எடுத்துச் சொல்லியும், தமக்கு மீண்டும் வாய்ப்பளித்தால் மேலும் பல வளர்ச்சிப் பணிகளை செய்வேன் என்று உறுதியளித்தார்.*

*வாக்கு சேகரிப்பின் போது, திமுக நிர்வாகி கள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உடனிருந்தனர்.*

### கோடை விடுமுறை கூட்ட நெரிசலை சமாளிக்க

# 6 விரைவு ரயில்களில் கூடுதல் பெட்டிகள் இணைப்பு!

*சென்னை, மார்ச் 30-*

*சென்னை சென்ட்ரல் திருப்பதிக்கு இயக்கப்படும் சப்தகிரி விரைவு ரயில் உள்பட 6 ரயில்களில் தற்காலிகமாக கூடுதல் பெட்டிகள் சேர்க்கப்பட உள்ளன.*

*தெற்கு ரயில்வேயில் முக்கிய வழித்தடங்களில் இயக்கப்படும் வழக்கமான விரைவு ரயில்களில் நெரிசலை குறைக்கும் விதமாக, சிறப்பு ரயில்கள் இயக்கப்படும். இதுதவிர, வழக்கமான ரயில்களில் பயணிகள் தேவையைப் பூர்த்தி செய்ய வசதியாக. கூடுதல் பெட்டிகள் சேர்க்கப்படும். அந்த வகையில், 6 ரயில்களில் கூடுதல் பெட்டிகள் சேர்க்கப்படவுள்ளன. அதன்படி, சென்னை சென்ட்ரல் திருவனந்தபுரத்துக்கு இயக்கப்படும் ஏசி அதிவிரைவு ரயிலில் (22207) மார்ச் 31ம் தேதி முதல் மே 5ம் தேதி வரை 2 ஏசி மூன்றடுக்கு பெட்டிகள் இணைக்கப்பட உள்ளன. மறு மார்க்கத்தில், இந்த ஏசி அதிவிரைவு ரயிலில் (22208) ஏப்.1ம் தேதி முதல் மே 6ம் தேதி வரை 2 ஏசி மூன்றடுக்கு பெட்டிகள் இணைக்கப்படும். சென்னை சென்ட்ரல் திருப்பதிக்கு இடையே இயக்கப்படும் சப்தகிரி விரைவு ரயிலில் (16053 16054) கூடுதலாக ஒரு இருக்கை வசதி கொண்ட (சேர்கார்) பெட்டி மார்ச் 30ம் தேதி முதல் ஜூன் 2ம் தேதி வரை இணைக்கப்படும். சென்னை சென்ட்ரல் திருப்பதிக்கு இடையே இயக்கப்படும் விரைவு ரயிலில் (1605716058) மார்ச் 30ம் தேதி முதல் ஜூன் 2ம் தேதி வரை ஒரு இருக்கை வசதி கொண்ட (சேர்கார்) பெட்டி கூடுதலாக இணைக்கப்படும்.*

*சென்னை சென்ட்ரல் ஈரோடுக்கு இயக்கப்படும் ஏற்காடு அதிவிரைவு ரயிலில் (22649) ஏப்.1ம் தேதி முதல் ஜூன் 4ம் தேதி வரை ஒரு 2ம் வகுப்பு தூங்கும் வசதி பெட்டி கூடுதலாக இணைக்கப்படும். மறுமார்க்கத்தில், இந்த விரைவு ரயிலில் (22650). மார்ச் 29ம் தேதி முதல் ஜூன் 1ம் தேதி வரை ஒரு பெட்டி கூடுதலாக சேர்க்கப்படும்.*

*இதுதவிர, சென்னை செனட்ரல் சார்லபள்ளி இடையே இயக்கப்படும் அதிவிரைவு ரயிலில் ஒரு 2ம் வகுப்பு தூங்கும் வசதி பெட்டியும், ராமேசுவரம் மங்களூரு சென்ட்ரல் இடையே இயக்கப்படும் வாராந்திர விரைவு ரயிலில் 2 ஏசி மூன்றடுக்கு பெட்டியும் சேர்க்கப்படும்.*

*கோடை கால விடுமுறையை முன்னிட்டு, இந்த கூடுதல் பெட்டிகள் சேர்க்கப்படுவதன் மூலம், பயணிகளின் நெரிசலை குறைக்கும் என எதிர்பார்க்கிறோம் என்று, தெற்கு ரயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர்.*



செஞ்சி சட்டமன்ற தொகுதி தி.மு.க. வேட்பாளராக அறிவித்த முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ.வுக்கு செஞ்சியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியினர் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமையில்உற்சாக வரவேற்பளித்தனர்.